**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி**

**முன்னிலை திரு.எம்.பொன்பாண்டி, பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர், பழனி**

**2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆடி மாதம் 5ம் நாள்**

**2026ம் வருடம் ஜூலை திங்கள் 21ம் நாள் செவ்வாய்க்கிழமை**

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.619/2012

அரசுக்காக – காவல் சார்பு ஆய்வாளர்,
பழனி தாலுகா கா.நி.கு.எண்.390/2007 **... குற்றமுறையீட்டாளர்**

/எதிர்/

1. **கருணாநிதி, இறப்பு**
   த/பெ.பழனிச்சாமி,
   V.K.மில், பழனி வட்டம்,
   திண்டுக்கல் மாவட்டம்.

2. சின்ன எல்லப்பன்,
   த/பெ.காளியப்பன்,
   பெத்தமநாயக்கன்பட்டி,
   பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

3. சக்திவேல்,
   த/பெ.அம்மாபட்டி,
   சமத்துவபுரம்,
   சின்னக்கலையம்புத்தூர்,
   பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம். **... எதிரிகள்**

இவ்வழக்கு 19.10.2012 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 திரு.B.பார்த்திபன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.குமாரசாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

**தீர்ப்புரை**

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –**

கடந்த 07.07.2007ம் தேதி காலை 09.45 மணிக்கு D.D.253 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி சின்னக்கலையம்புத்தூரில் வாதி தேர்தல் அலுவலர் நிர்வாக குழு உறுப்பினர் தேர்தல் நடத்திக்கொண்டிருந்தபோது எதிரிகள் மூவரும் வரிசையாக ஓட்டு போட வரிசையில் இருந்தவர்களிடம் தேர்தல் வாக்கு சீட்டினை வழங்கும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தபோது உபயோகிக்கப்படாத வாக்கு சீட்டு

எண்.55 முதல் வாக்கு சீட்டு எண்.150 வரையுள்ள வாக்குச்சீட்டுக்களை பிடுங்கி ஓட, எத்தணித்தவர் தடுக்க மர்ம ஸ்தானத்தை இறுக்கி பிடித்துக்கொண்டார்கள் பணியில் இருந்தவர்கள் தள்ளிவிட்டு ஓடிவிட்டதாகவும், எதிரிகள் அரசு வேலையை செய்யவிடாமலும், வாக்குச்சீட்டை எடுத்துச் சென்றதாகவும், எனவே, 1 முதல் 3 எதிரிகள் இதச பிரிவுகள் 323, 353 மற்றும் பிரிவு 135 மக்கள் பிரதிநிதித்துவம் சட்டம் 1951ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக 1 முதல் 3 எதிரிகள் மீது பழனி தாலுகா காவல் நிலைய காவல் சார்பு ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 1 முதல் 3 எதிரிகள் இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் 1 முதல் 3 எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் 1 முதல் 3 எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர்கள் குற்றத்தினை மறுத்துள்ளார்கள், இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 251(1) கு.வி.மு.ச.வின் படி 1 முதல் 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 323, 353 மற்றும் பிரிவு 135 மக்கள் பிரதிநிதித்துவம் சட்டம் 1951ன் கீழான குற்றங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 251(2)ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்துரைத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில் 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 7 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 5 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –**

திண்டுக்கல் மாவட்டம் பழனி தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது 07.07.2007ம் ஆண்டு மதியம் 12.00 மணிக்கு சின்னகலையமுத்தூார் கூட்டுறவு சார்பு பதிவாளர் மற்றும் தேர்தல் அலுவலர் ப.

சுப்பிரமணியன் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று பழனி தாலுகா காவல்நிலைய கு.எண்.390/2007 சட்டப்பிரிவு 323, 353 r/w 135 R.P. Act 1951ன் படி அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வாதியின் புகாரையும் அச்சு முதல் தகவல் அறிக்கையும் இணைத்து கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்து, இவ்வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் சாட்சி சார்பதிவாளர் மற்றும் தேர்தல் அலுவலர் சுப்பிரமணியம் மற்றும் முதல்நிலை மேற்பதிவாளர் கூட்டுறவு துறை ஆறுமுகம் என்பவரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்து, மேலும் இவ்வழக்கு சம்பந்தமாக 08.07.2007ம் தேதி 10.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடம் சாட்சிகள் அழகுராஜ் மற்றும் செல்வம் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் மற்றும் அ.சா.ஆ.2 பார்வை மகஜர் தயார் செய்து, மேலும் இவ்வழக்கின் தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கி செயலாளர் கிருஷ்ணசாமி மற்றும் முனியாண்டி இவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்ட சாட்சிகள் அழகுராஜ் மற்றும் செல்வம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சின்னகலையமுத்தூர் கூட்டுறவு வேளாண்மை வங்கி நிர்வாக குழு உறுப்பினர் அ.சா.ஆ.5 தேர்தல் வாக்கு சீட்டு (10 எண்ணிக்கைகள்) வாக்கு சீட்டை கைப்பற்றி, இவ்வழக்கில் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் தலைமறைவு எதிரிகள் கருணாநிதி, சக்திவேல், சின்னஎல்லப்பன் ஆகியோர் மீது 30.07.2007ம் தேதி சட்டப்பிரிவுகள் 323, 353 இ.த.ச மற்றும் உ/இ 135 மக்கள்பிரதிநிதித்துவ சட்டம் 1951ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிவுற்றது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிரான சங்கதிகளை 1 முதல் 3 எதிரிகளிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரிகள் பொய்சாட்சி என்று கூறினார்கள். 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிய போது, 1 முதல் 3 எதிரிகள் சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே, 1 முதல் 3 எதிரிகள் தரப்பு முடிக்கப்பட்டது.

இவ்வழக்கின் 1ம் எதிரி வழக்கிடை காலத்தில் இறந்துவிட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் அற்றுப்போனதாக உத்தரவிடப்படுகிறது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 2, 3 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 323, 353 மற்றும் பிரிவு 135 மக்கள் பிரதிநிதித்துவம் சட்டம் 1951ன் கீழான குற்றங்களானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

**<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –**

எதிரிகள் காயம் ஏற்படுத்தி, வாக்கு சீட்டுகளை பிடுங்கி சென்று, அரசு அதிகாரிகளின் பணி செய்யவிடாமல் தடுத்த செயலானது அ.சா.1 முதல் அ.சா.7 ஆகிய சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் மூலம் எல்லா தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**<u>9. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –**

எதிரிகள் காயம் ஏற்படுத்தி, வாக்கு சீட்டுகளை பிடுங்கி சென்று, அரசு அதிகாரிகளின் பணி செய்யவிடாமல் தடுத்த செயலானது அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே 2, 3 எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, 2, 3 எதிரிகளுக்கு எதிரானக் குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து 2, 3 எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**<u>10. தீர்வு</u> –**

கடந்த 07.07.2007ம் தேதி காலை 09.45 மணிக்கு D.D.253 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி சின்னக்கலையம்புத்தூரில் வாதி தேர்தல் அலுவலர் நிர்வாக குழு உறுப்பினர் தேர்தல் நடத்திக்கொண்டிருந்தபோது எதிரிகள் மூவரும் வரிசையாக ஓட்டு போட வரிசையில் இருந்தவர்களிடம் தேர்தல் வாக்கு சீட்டினை

வழங்கும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தபோது உபயோகிக்கப்படாத வாக்கு சீட்டு எண்.55 முதல் வாக்கு சீட்டு எண்.150 வரையுள்ள வாக்குச்சீட்டுக்களை பிடுங்கி ஓட, எத்தணித்தவர் தடுக்க மர்ம ஸ்தானத்தை இறுக்கி பிடித்துக்கொண்டார்கள் பணியில் இருந்தவர்கள் தள்ளிவிட்டு ஓடிவிட்டதாகவும், எதிரிகள் அரசு வேலையை செய்யவிடாமலும், வாக்குச்சீட்டை எடுத்துச் சென்றதாகவும், எனவே, 1 முதல் 3 எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு புகார் மனு கொடுத்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

11. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 07.07.2007ம் ஆண்டு தான் கூட்டுறவு சார் பதிவாளராக பணியில் இருந்ததாகவும், சின்னகலையம்புத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிங்கு நிர்வாக குழு தேர்விற்காக தன்னை தேர்தல் அலுவலராக நியமனம் செய்ததாகவும், 07.07.2007ம் தேதி சுமார் 09.00 மணியளவில் சின்னகலையம்புத்தூர் தொடக்க வேளாண்மை அலுவலகத்திற்கு சென்று தேர்தல் பணி செய்து வந்ததாகவும், சுமார் 09.45 மணி வரை 54 வாக்குகள் பதிவாகியிருந்ததாகவும், அப்போது நிர்வாக குழு உறுப்பினருக்கு போட்டியிடும் சின்னஎல்லப்பன், கருணாநிதி மற்றும் சக்திவேல் ஆகியோர் தங்களுக்கு வாக்கு சீட்டு கொடுக்குமாறு தன்னிடம் கேட்டதாகவும், தான் கொடுப்பதற்குள் தன்னிடம் வந்து வாக்கு சீட்டுகளை பிடுங்கினார்கள் என்றும், தான் தடுத்ததாகவும், தனது மர்மஉறுப்பினை மூன்று பேரும் பிடித்து விட்டார்கள் என்றும், என்னிடம் இருந்த வாக்கு சீட்டை மூவரும் பறித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள் என்றும், அங்கிருந்த காவலர்கள் தடுத்தும் அவர்களை தள்ளிவிட்டு விட்டு இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், 07.07.2007ம் தேதி சின்னகலையம்புத்தூர் தொடக்க வோளண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நிர்வாக குழுஉறுப்பினருக்கான தேர்தல் பணிக்கு உதவி தேர்தல் அலுவலராக நியமிக்கப்பட்டிருந்ததாகவும், தேர்தல் நாளான்று காலை 09.00 மணியள்வில் வாக்குபதிவு தொடங்கப்பட்டதாகவும், தொடர்ந்து வாக்குபதிவு நடைபெற்றுக்கொண்டிருந்ததாகவும், சுமார் 55 வாக்குசீட்டுகள் வரை அமைதியாக நடந்ததாகவும், தான் தேர்தல் அலுவலருடன் பணியிலிருந்தபோது

சங்க உறுப்பினர் கருணாநிதி, சின்ன எல்லப்பன் சக்திவேல் ஆகிய மூவரும் வாக்குசீட்டு பெற வந்ததாகவும், திடீரென தேர்தல் அலுவலரை தாக்கி அவரிடமிருந்த வாக்குசீட்டுகளை பறித்துச் சென்றதாகவும், வாக்குசீட்டுகள் 100 இருக்கும் என்றும், அவர்கள் அங்கிருந்தவர்களை தள்ளிவிட்டு விட்டு தப்பித்து ஓடிவிட்டார்கள் என்றும், மேற்படி நபர்கள் நீதிமன்றத்தில் உள்ளார்களா என்றால், 12 வருடம் ஆகிவிட்டதால் தனக்கு ஞாபகம் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.3 தனது சாட்சியத்தில், 07.07.2007ம் தேதி தான் சின்னகலையம்புத்தூர் கூட்டுறவு சங்கத்தில் செயலாளராக பணியிலிருந்ததாகவும், அன்று காலை 9.00 மணிக்கு தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தேர்தல் பணியைச் செய்தார்கள் என்றும், காலை 09.45 மணி வரை சுமார் 50.54 வாக்குகள் பதிவாகியிருந்தபோது சின்னஎல்லப்பன், கருணாநிதி, சக்திவேல் ஆகியோர் வாக்குசீட்டு வாங்குவதற்காக வந்ததாகவும், அவர்கள் வாக்குசீட்டை தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து பிடுங்கினார்கள் என்றும், தாங்கள் தடுத்தபோது அவர்கள் தங்களை தள்ளிவிட்டு விட்டு ஓடிவிட்டார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14. அ.சா.4 தனது சாட்சியத்தில், 07.07.2007ம் தேதி தான் நகை மதிப்பீட்டாளராக சங்கத்தில் பணியாற்றி வந்ததாகவும், தங்களது சங்கத்திற்கு கூட்டுறவு தேர்தல் நடந்ததாகவும், காலை 9.00 மணிக்கு தேர்தல் ஆரம்பித்து வாக்குபதிவு நடந்து கொண்டிருந்ததாகவும், சுமார் 54 வாக்குகள் 9.45 மணிவரை பதிவாகியிருந்தபோது சின்னஎல்லப்பன், கருணாநிதி மற்றும் சக்திவேல் ஆகியோர் வாக்கு போடுவதற்காக வந்தார்கள் என்றும், அப்போது சின்ன எல்லப்பன் வாக்குசீட்டை வாங்கியபோது மூவரும் சேர்ந்து தேர்தல் நடத்தும் அலுவலரை அமுக்கி வாக்குசீட்டை பிடுங்கிக் கொண்டு தள்ளிவிட்டு விட்டு ஓடிவிட்டார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

15. இந்த வழக்கில் அ.சா.1ஐ தாக்கி வாக்கு சீட்டுகளை பிடுங்கி தேர்தல் நடத்த விடாமல் தடுத்து விட்டார்கள் என்று வழக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அ.சா.1 தேர்தல் அலுவலராக நியமிக்கப்பட்டு தேர்தல் நடந்து கொண்டிருந்தபோது நிர்வாக குழு உறுப்பினர்களுக்கு போட்டியிடும் எதிரிகள் அவர்களுடைய வாக்குச்சீட்டுகளை வாக்கு செலுத்த கேட்டுக்கொண்டு இருந்தபோது மற்ற வாக்குச்சீட்டுகளையும் பிடுங்கினார்கள்

என்று அ.சா.1 சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில், சங்க உறுப்பினர்களான கருணாநிதி, சின்ன எல்லையப்பன், சக்திவேல் ஆகிய மூன்று பேரும் வாக்குச்சீட்டுகளை பிடுங்கினார்கள் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில், எதிரிகள் சின்ன எல்லையப்பனும், சக்திவேலும், கருணாநிதியும் வாக்குச்சீட்டுகளை பிடுங்கினார்கள் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 தனது சாட்சியத்தில் எதிரிகள் வாக்கு சீட்டை பிடுங்கி சென்றார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்.

16. இந்த நிலையில் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளில் யார் வாக்குச்சீட்டை பிடுங்கினார்கள் என்று ஞாபகம் இல்லை என்றும், யார் வாக்குச்சீட்டை பிடுங்கினார்கள் என்று தன்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றும், சம்பவம் நடந்த நேரத்தில் இந்த வழக்கில் உள்ள எதிரிகள் தான் உண்மை எதிரிகளா என்று தனக்கு தெரியாது என்றும் பதிலளித்து சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் தான் இல்லை என்றும், அதனால் யார் ஓட்டு சீட்டை கிழித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் பதிலளித்து சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணை பதிலில் வழக்கு சம்பவம் குறித்து தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார்.

17. அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர் தங்களது முதல் விசாரணையில் மேற்சொன்னவாறு எதிரிகள் குறித்து தெளிவாக சாட்சியமளித்துள்ள நிலையில், சம்பவ இடத்தில் அரசு பணியில் இருந்த அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் மேற்சொன்ன வகையில் குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள பதில்கள் அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோரின் சாட்சியத்தை குறித்து, அதன் உண்மை தன்மையை குறித்து ஒரு தகுநிலை சந்தேகத்தை ஏற்படுத்தும் அளவில் இருக்கிறது. ஏனென்றால் அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.4 ஆகியோர் தேர்தல் நேரத்தில் ஒன்றாக ஒரே இடத்தில் பணியில் இருந்த போது இந்த சம்பவம் நடந்தது என்று வழக்கு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அ.சா.2, அ.சா.3ன் பதில்கள் அவர்களின் முதல் விசாரணை சாட்சியத்தை

மட்டுமில்லாமல் மற்ற சாட்சிகளான அ.சா.1, அ.சா.4 ஆகியோரின் சாட்சியத்தையும் பாதிக்கும் வகையில் அமைகிறது.

18. ஒரு வழக்கில் அரசு அலுவலர்கள் சாட்சியாக முன்வைக்கப்பட்ட நிலையில் இந்த அரசு அலுவலர்களின் சாட்சியத்தை மட்டும் வைத்தே அந்த சம்பவம் குறித்து எதிரிகளின் செய்கையை தீர்மானிக்கும் சூழ்நிலையில், அவ்வாறு ஒரே நேரத்தில், ஒரே இடத்தில், ஒரே அரசு பணியை செய்து கொண்டு இருந்த சாட்சிகளில் இரண்டு சாட்சிகள் அரசு தரப்பு வழக்குக்கு தகுநிலை சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் சம்பவம் குறித்தும், எதிரிகள் குறித்தும், எதிரிகள் செய்கைகள் குறித்தும் முரண்பாடாக சாட்சியமளித்திருப்பதை வைத்து பார்க்கும் போது இந்த சூழ்நிலைகளானது முன்வைக்கப்பட்டுள்ள குற்றத்தின் நிரூபணத்தை பாதிக்கும் வகையில் எதிரிகளுக்கு சாதகமாக அமைந்துள்ளதால், குற்றவியல் வழக்கில் சாட்சியத்தின் தன்மை ஒரு பகுதி எதிரிக்கு எதிராகவும், ஒரு பகுதி எதிரிக்கு ஆதரவாகவும் இருக்கும்போது எதிரிக்கு ஆதரவாக இருக்கும் பகுதியை கருத்தில் கொண்டு எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டில் பாதிப்பு ஏற்படுகிறது என்று முடிவு செய்வது குற்றவியல் வழக்கு விசாரணையின் ஒரு அம்சமாக உள்ளதால், இரண்டு பார்வை உள்ள சூழ்நிலையில், அதில் எதிரிக்கு சாதகமான பார்வையை எடுக்க வேண்டும் என்பது குற்ற வழக்கு சூழ்நிலையின் முக்கியமான அங்கமாகும். அந்த வகையில் பார்க்கும்போது அ.சா.2, அ.சா.3 ஆகியோரின் சாட்சியம் மேற்சொன்ன வகையில் தகுநிலை சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதால், இந்த வழக்கில் சொல்லியுள்ள காயம் ஏற்படுத்தி, வாக்கு சீட்டுகளை பிடுங்கி சென்று, அரசு அதிகாரிகளின் பணி செய்யவிடாமல் தடுத்தார்கள் என்று முன்வைத்திருக்கும் அரசு வழக்கில் ஒரு தகுநிலை சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றும், இந்த சம்பவம் குறித்து அரசு தரப்பு எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் எந்த சங்கதியையும் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. இந்த வழக்கில் அ.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கிழிந்த வாக்கு சீட்டுகள் அ.சா.1யிடமிருந்து எதிரிகள் பிடுங்கி சென்று கிழித்தார்கள் என்று வழக்கு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள்

வாக்குச்சீட்டை பறித்துக் கொண்டு ஓடி விட்டார்கள் என்று சாட்சியமளித்துள்ளதையும், அ.சா.2 தனது சாட்சியத்தில், எதிரிகள் வாக்குச்சீட்டை பறித்துக்கொண்டு ஓடிவிட்டார்கள் என்று சாட்சியமளித்துள்ளதையும், அ.சா.3 தனது சாட்சியத்தில் எதிரிகள் வாக்குச் சீட்டுகளை பறித்துக்கொண்டு ஓடி விட்டார்கள் என்று சாட்சியமளித்துள்ளதையும், அ.சா.4ன் சாட்சியத்தில் எதிரிகள் வாக்குச் சீட்டுகளை பிடுங்கிக் கொண்டு ஓடி விட்டார்கள் என்று சாட்சியமளித்துள்ளதையும் வைத்து பார்க்கும் போது, மேற்படி அ.சா.ஆ.5 வாக்கு சீட்டுகள் எந்த வகையில் புலன்விசாரணை அதிகாரியால் இந்த வழக்கில் இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எந்த விளக்கமும் இல்லை.

20. குறிப்பாக எதிரிகள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து பெறப்பட்டதா ? என்ற விளக்கம் இல்லை. ஏனென்றால் இந்த வழக்கில் மூன்று எதிரிகளும் கைது செய்யப்படவில்லை. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி ஒப்படைத்தார்களா ? என்ற விவரமும் இல்லை. மேலும் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டதா? என்ற விவரமும் இல்லை. இந்த சூழ்நிலையில் எதிரிகள் பிடுங்கிக்கொண்டு ஓடி விட்டார்கள் என்று அ.சா.1, அ.சா.4 ஆகியோர் சாட்சியமளித்து, விசாரிக்கப்பட்டுள்ள நிலையில்,, அந்த வாக்கு சீட்டுகள் எந்த வகையில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்ற விளக்கம் இல்லாத நிலையில், எதிரிகள் தான் அந்த இந்த வாக்குச்சீட்டுகளை பிடுங்கி சென்றுள்ளார்கள் என்று முன்வைக்கப்பட்டுள்ள அரசு தரப்பு வழக்கில் வெகுவாக பாதிக்கும் வகையில் ஒரு தகுநிலை சந்தேகம் ஏற்படுகிறது. எனவே மேற்சொன்ன வாக்கு சீட்டுகள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலை குறித்து எந்த விளக்கமும் இல்லாத காரணத்தினால், எதிரிகள் தான் இந்த வாக்கு சீட்டுகளை பிடுங்கி சென்றுள்ளார்கள் என்று முன்வைத்திருக்கும் அரசு வழக்கானது, குறிப்பாக பிரிவு 135 மக்கள் பிரதிநிதித்துவம் சட்டம் 1951ன் கீழான குற்றமானது குறித்து மேற்சொன்ன வகையில் ஒரு தகுநிலை சந்தேகம் ஏற்படுகிறது என்றும் அரசு தரப்பில் பிரிவு 135 மக்கள் பிரதிநிதித்துவம் சட்டம் 1951ன் கீழான குற்றம் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் 2, 3 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 323, 353 மற்றும் பிரிவு 135 மக்கள் பிரதிநிதித்துவம் சட்டம் 1951ன் கீழான குற்றங்கள் எல்லா தகுநிலை ஐயப்பாட்டுக்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, 2, 3 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என்று கண்டறிகிறது.

22. முடிவில், 2, 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 323, 353 மற்றும் பிரிவு 135 மக்கள் பிரதிநிதித்துவம் சட்டம் 1951ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து 2, 3 எதிரிகளை குவிமுச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

<u>23. வழக்குச் சொத்து</u> –

இந்த வழக்கில் வழக்குச்சொத்துக்கள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜூலை திங்கள் 21ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.21 19:02:36 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் –</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | சுப்பிரமணியன் |
| அ.சா.2 | ஆறுமுகம் |
| அ.சா.3 | கிருஷ்ணசாமி |
| அ.சா.4 | முனியாண்டி |
| அ.சா.5 | அழகுராஜ் |
| அ.சா.6 | செல்வன் |
| அ.சா.7 | மோகன்ராஜ் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் –</u>**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் | 07.07.2007 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | பார்வை மகஜர் | 08.07.2007 | அ.சா.ஆ.2 | அ.சா.5 | அசல் |
| 3 | முதல் தகவலறிக்கை | 07.07.2007 | அ.சா.ஆ.3 | அ.சா.7 | அசல் |
| 4 | மாதிரி வரைபடம் | 08.07.2007 | அ.சா.ஆ.4 | அ.சா.7 | அசல் |
| 5 | தேர்தல் வாக்குசீட்டுகள் | – | அ.சா.ஆ.5 | அ.சா.7 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்** – இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள்** – இல்லை.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.21 19:02:41 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**குறிப்பு :–**

1. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Palani

Calendar of cases tried by the Judicial Magistrate of Palani.

| Date of Judgment : 21.07.2026 | | | | | | | | | Explanation of delay and remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Offence** | **Report of complaint** | **Apprehension of accused** | **Released on Bail** | **Commencement of trial** | **Close of trial** | **Sentence or order** | | | |
| 07.07.2007 | 07.07.2007 | -- | -- | 21.07.2015 | 16.08.2022 | 21.07.2026 | F.I.R. Date:<br>Charge Sheet Date:<br>D.O.P.<br>D.O.F. | 07.07.2007<br>30.07.2007<br>19.10.2012<br>15.10.2012 | Complainant side evidence till 01.07.2026 |

Judgment in CC 619/2012 on the file of the Judicial Magistrate of Palani.

Complainant: The Sub-Inspector of Police, Taluk P.S in Cr.No.390/2007

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| **Karunanidhi (died)** | -- | S/o.Palanisamy |
| Chinna Ellaiyappan | -- | S/o.Kaliyappan |
| Sakthivel | -- | S/o.Ammapatti |

| Caste or Religion | Calling | Residence | Taluk |
|---|---|---|---|
| Hindu | -- | V.K.Mill | Palani |
| Hindu | -- | Bethamanaickenpatti | Palani |
| Hindu | -- | Samathuvapuram | Palani |

Offence : U/s 379 IPC

Sentence : A2, A3 were found not guilty from the charges U/s. 323, 353 IPC and Section 135 of Representatives of People Act, 1951 and the accused were acquitted U/s.255(1) of Crpc.,

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.21 19:02:48 +0530

**Judicial Magistrate,**

**Palani.**

Judicial Form No.61

(See Rule 106)

ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE COURT, PALANI

JUDGMENT IN CC 619 OF 2012

ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE, PALANI

Complainant : Sub-Inspector of Police, Palani Taluk PS.

Accused : 1) Karunanidhi and 2 others

Offence : 323, 353 IPC and Section 135 of Representatives of People Act, 1951

**Finding** : A1, A2 were found not guilty

**Sentence** : A2, A3 were found not guilty from the charges U/s. 323, 353 IPC and Section 135 of Representatives of People Act, 1951 and the accused were acquitted U/s.255(1) of Crpc.,

**Property** : NIL

| Sl. No | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father name | Caste or race | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | **Karunanidhi (died)** | S/o.Palanisamy | Hindu | – | Palani | – |
| 2 | Chinna Ellaiyappan | S/o.Kaliyappan | Hindu | – | Palani | – |
| 3 | Sakthivel | S/o.Ammapatti | Hindu | – | Palani | – |

| Date of | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension or appearance | Release on bail | Commence ment of trail | Close of trail | Sentence or order |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 07.07.2007 | 07.07.2007 | -- | -- | 21.07.2015 | 16.08.2022 | 21.07.2026 |

| Explanation of delay |
|---|
| (15) |
| Complainant side evidence till 01.07.2026 |

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.21 19:02:54 +0530

**Judicial Magistrate,**

**Palani.**

**Case Summary in CC 619/2012**

| S. No | Description | Remarks |
|---|---|---|
| 1 | The Period of Remand of the Accused/Surrender | -- |
| 2 | Date of filing of the Complaint/Final Report in the Court | 30.07.2007 |
| | The date of Commital of the Case to the court of session | Not applicable |
| 4 | First Questioning u/s 240 of crpc | 21.07.2015 |
| 5 | Filling of Miscellaneous petition and result | Nil |
| 6 | Date of Examination in chief and Cross examination of witness. | Witness / Chief / Cross:<br>PW1 – 02.07.2019 – 28.03.2022<br>PW2 – 02.07.2019 – 28.03.2022<br>PW3 – 02.07.2019 – 09.06.2022<br>PW4 – 02.07.2019 – --<br>PW5 – 24.07.2019 – 24.07.2019<br>PW6 – 24.07.2019 – 24.07.2019<br>PW7 – 01.08.2022 – 01.07.2026 |
| 7 | NBW Issued date | NIL |
| 8 | NBW recalled | NIL |
| 9 | Questionings u/s 313(i)(b) of Cr.P.C. | 16.08.2022 |
| 10 | Details of Abscondence of an accused and his appearance/production | NIL |
| 11 | Grant of stay by superior courts and the results there of | NIL |

Witness examination details (item 6):

| Witness | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 02.07.2019 | 28.03.2022 |
| PW2 | 02.07.2019 | 28.03.2022 |
| PW3 | 02.07.2019 | 09.06.2022 |
| PW4 | 02.07.2019 | -- |
| PW5 | 24.07.2019 | 24.07.2019 |
| PW6 | 24.07.2019 | 24.07.2019 |
| PW7 | 01.08.2022 | 01.07.2026 |

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.21 19:03:00 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**C.C No.619/2012**
**Date : 21.07.2026**

A1 died(C.A) A2, A3 Present. Judgment pronounced in Open Court.

A2, A3 were found not guilty from the charges U/s. 323, 353 IPC and Section 135 of Representatives of People Act, 1951 and the accused were acquitted U/s.255(1) of Crpc.,

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.21 19:03:05 +0530

**Judicial Magistrate,**
**Palani.**